

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011-2012)

(பதினான்காவது பேரவை)

எட்டாவது அறிக்கை

28–12–2011 ஆம் நாளன்று நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 23 APR 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு

(2011 - 2012)

(பதினான்காவது பேரவை)

எட்டாவது அறிக்கை

28–12–2011 ஆம் நாளன்று நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கங்கள்
1.	குழு உறுப்பினர்கள்	iii
2.	அறிக்கை	v
	இணைப்பு-I	1–26
	இணைப்பு-II	29–40
	இணைப்பு-III	43–50

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது.)

தலைவர்

1. திரு. ப. மோகன்,
   அரசு தலைமை கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. பா. கணேசன்
4. திரு. ஆர். என். கிட்டுசாமி
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. ந. நஞ்சப்பன்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. ஆ. ராமசாமி
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

* 11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி கு. இந்துமதி	..	துணைச் செயலாளர்
திரு. மா. கோபாலகிருஷ்ணன்	..	சார்புச் செயலாளர்.

* (13–01–2012 முதல்)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

எட்டாவது அறிக்கை

முன்னுரை

2011-2012-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் எட்டாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

14-07-2011-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுவின் கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 28-12-2011-ஆம் நாளன்று நாமக்கல் மாவட்டத்தில் குழுவின் கூட்டத்தை கூட்டலாம் என குழு முடிவு செய்தது. அம்மாவட்டத்திலுள்ள பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 92 மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 62 மனுக்கள் மீது அறிக்கை அனுப்பக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட பதிலறிக்கைகளில் 60 மனுக்கள் மீதான அறிக்கைகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2011 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாநாட்டு வளர்ச்சி மன்றக் கூடத்தில் குழு கூடியது.

அக்கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நாமக்கல் மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத் துறை அலுவலர்கள் குழுமுன் விளக்கமளித்தனர். சம்பந்தப்பட்ட மனுதாரர்களும் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தினர். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்ற 60 மனுக்களைக் குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 33 மனுக்கள் குறித்துக் குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 16 மனுக்கள் மீது அளிக்கப்பெற்ற அரசுத் துறைகளின் பதிலுரைகள் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், அவை படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 11 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகளை ஏற்று அவை நிறைவேற்றப்பெற்றதாகக் கருதலாம் எனக் குழு முடிவு செய்தது.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு-I-இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு-II-இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு-III-இல் அளிக்கப்பட்டுள்ளன.

11-4-2012-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

ப. மோகன்,
தலைவர்,
மனுக்கள் குழு.

சென்னை-600 009,
11-4-2012,
பங்குனித் திங்கள் 29-ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு-2043.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
1	2972	திரு. என். ராமலிங்கம், த/பெ. நல்லியண்ணன், கே. ராசாம்பாளையம், எஸ். வாழவந்தி (அஞ்சல்), பரமத்தி வேலூர் வட்டம்.	எஸ். வாழவந்தி ஆதிதிராவிடர் தெரு முதல் கருந்தோட்டம் வழியாக குட்லாம்பாறை AVR வீடுவரை உள்ள மண்சாலையை புதிய தார்சாலையாக மாற்ற கோருதல்.

துறையின் பதிலுரை. (5)	குழுவின் பரிந்துரை. (6)
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள 2.5 கி.மீ. மண் சாலையை, தார்சாலையாக மாற்ற ரூ. 39.00 லட்சம் தேவைப்படுகிறது. இந்த சாலையானது விவசாயத்திற்கும், பொதுமக்கள் போக்குவரத்திற்கும் அத்தியாவசியமானதாகும். மேற்கண்ட பணியினை செய்து முடிக்க போதுமான அளவு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே வரும் நிதியாண்டில் நபார்டு திட்டத்தின் மூலம் இப்பணியினை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ.) மோகனூர் அவர்களின் ந.க. 3785/11/அ3, நாள்: 23–12–2011.]*	அடுத்த நிதியாண்டில் எஸ். வாவழவந்தி, ஆதிதிராவிடர் தெரு முதல் கருந்தோட்டம் வழியாக குட்லாம்பாறை ஏவி ஆர் வீடுவரை உள்ள மண் சாலையை தார் சாலையாக மாற்றும் பணியினை நபார்டு திட்டத்தில் மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

TRUTH ALONE TRIUMPHS
உண்மையே வெல்லும்

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	2973	திரு. பி. ரவி, தபெ. பெரியசாமி, எஸ். வாழவந்தி (அஞ்சல்), பரமத்தி வேலூர் (வட்டம்), நாமக்கல் (மாவட்டம்).	பெரமாண்டம்பாளையம் மோளக்கவுண்டனூர் முதல் ஆண்டிபாளையம் வரை மண்சாலையை புதிய தார்சாலையாக மாற்ற கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 கி.மீ. மண்சாலையை தார்சாலை மற்றும் சிறுபாலம் அமைத்துத் தர ரூ. 17.00 லட்சம் தேவைப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் மேற்கண்ட பணியினை செய்து முடிக்க போதுமான அளவு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), மோகனூர் அவர்களின் ந.க.எண் 3785/2011/அ3, நாள்: 23-12-2011.]*	இப்பணியினை, முன்னுரிமை அடிப்படையில் அடுத்த ஆண்டு செய்வதற்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
3	2974	திரு. கணேசன், த/பெ. முத்துசாமி, பெரமாண்டம்பாளையம், எஸ். வாழவந்தி (அஞ்சல்), பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் (மாவட்டம்).	எஸ். வாழவந்தியில் துணை கால்நடை மருத்துவமனை கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

எஸ். வாழவந்தி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5000க்கு மேல் இருப்பதால், புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. புதிய கால்நடை மருந்தகம் அமைக்க கோரும் பிரேரணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(மண்டல இணை இயக்குநர் கால்நடை பராமரிப்புத்துறை, நாமக்கல் அவர்களின் ந.க.எண் 1468/இ/2011, நாள்: 13–12–2011.)

குழுவின் பரிந்துரை

(6)

பரமத்திவேலூர் வட்டம் எஸ். வாழவந்தியில் துணை கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த குழு பரிந்துரைக்கிறது. இடைப்பட்ட காலத்தில் மனுதாரர் கோரிய ஊர்களுக்கு நடமாடும் கால்நடை மருத்துவ வசதியை வாரத்திற்கு ஒரு முறை செய்து தர ஏற்பாடு செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	2975	திருமதி காளியம்மாள், க/பெ. காளியண்ணன், பெரமாண்டம்பாளையம், எஸ். வாழவந்தி (அஞ்சல்), பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் (மாவட்டம்).	பெரமாண்டம்பாளையம் கிராமம், மோளக்கவுண்டனூர் காலனியில் அருந்ததியர் மக்கள் பொது கழிப்பிட வசதி கோரல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
பெரமாண்டம்பாளையம் கிராமத்தில் உள்ள மகளிர் சுகாதார வளாகம் ரூ. 50,000/– மதிப்பீட்டில் சீர்செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது. இந்த வளாகத்தில் இருந்து சுமார் 300 மீட்டர் தூரத்தில் மோளக்கவுண்டனூர் அருந்ததியர் காலனி உள்ளது. அருந்ததியர் காலனி பொதுமக்களுக்கு தனியாக ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் கழிப்பிடம் கட்ட இனி வரும் ஒன்றியக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), மோகனூர் அவர்களின் ந.க.எண் 3785/2011/அ3, நாள்: 23–12–2011.]*	மக்கள் தொகையினை கணக்கில் கொண்டு இப்பணியை நிறைவேற்றிடவும் அது குறித்த அறிக்கை ஒன்றினை அனுப்பவும் திட்ட இயக்குநர், நாமக்கல் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	2977	திருமதி செல்வி, க/பெ. சந்திரமோகன், பெரமாண்டம்பாளையம், எஸ். வாழவந்தி (அஞ்சல்), பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் (மாவட்டம்).	பெரமாண்டம்பாளையம் முதல் ஆண்டிபாளையம் வரை உள்ள தார்சாலையை புதுப்பிக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 கி.மீ. சாலையை சரி செய்வதற்கு ரூ. 10.00 லட்சம் தேவைப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் மேற்கண்ட பணியினை செய்து முடிக்க போதுமான அளவு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே வரும் நிதியாண்டில் வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), மோகனூர் அவர்களின் ந.க.எண் 3785/2011/அ3, நாள்: 23–12–2011.]*	அடுத்த நிதியாண்டில் மனுதாரர் கோரியுள்ள சாலையினை முன்னுரிமை அடிப்படையில் செப்பனிட்டு, பணியினை முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	2979	ஊர்ப்பொதுமக்கள், கொன்னப்பாளையம், கருந்தேவம்பாளையம், பெருங்குறிச்சி ஊராட்சி, பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் (மாவட்டம்).	நல்லூர் ஊராட்சி, கந்தம்பாளையம் பேருந்து நிறுத்தத்திலிருந்து, மேற்கு திசையில் கொன்னப்பாளையம் – கருந்தேவம்பாளையம் செல்லும் பெருங்குறிச்சி சாலையில் கந்தம்பாளையம் நல்லூர் ஊராட்சியின் முடிவிலிருந்து மணியனூர் ஊராட்சிக்கு உட்பட்ட 100 மீட்டர் சாலையை தார்சாலையாக மாற்றித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தல ஆய்வு செய்யப்பட்டது. இச்சாலையின் மொத்த நீளம் 0/0–1/4, கி.மீ. ஆகும். இதில் கி.மீ. 1.25 வரை தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள மீதமுள்ள பகுதியின் நீளம் 155 மீட்டர். இது ஓரடுக்கு கப்பி சாலையாக உள்ளது. இதனை தார்சாலையாக மாற்ற மதிப்பீடு ரூ. 2.50 இலட்சம் தேவைப்படுகிறது. தற்போது ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் போதுமான நிதி வசதி இல்லை. அரசிடம் இருந்து மானில நிதிக்குழு மான்யம் எதிர்பார்க்கப்படுகிறது. மானில நிதிக்குழு மான்யம் வரப்பெற்று, ஒன்றியப் பொது நிதி சீரடைந்ததும், அடுத்து வரும் மன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெற்று, 2012–13 ஆம் ஆண்டில் இப்பணி செய்து முடிக்கப்படும். *[ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், பரமத்தி அவர்களின் ந.க.எண் 1367/2010/அ3, நாள்: 15–12–2011.]*	2012–13 ஆம் ஆண்டில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலைப் பணியை முன்னுரிமை அடிப்படையில் எடுத்து முடித்திட பரமத்தி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
7	2982	திரு. பொ. பன்னீர்செல்வம், த/பெ. பொன்னுசாமி, 4/10, மூலப்பாளையம், இலுப்புலி ஊராட்சி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.	இலுப்புலி ஊராட்சியில் மூலப்பாளையம் பச்சான்காடு முதல் புள்ளாச்சிப்பட்டி குடித்தெரு வரை 3 கி.மீ.-க்கு மண்சாலையை தார் சாலையாக மாற்றுதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
மூலப்பாளையம் பச்சான் காடு முதல் புள்ளாச்சிப்பட்டி குடித்தெரு வரை உள்ள சாலை மண் சாலையாகும். இச்சாலையின் நீளம் 2.350 கி.மீ. ஆகும். இரண்டு அடுக்கு கப்பி மற்றும் தார்சாலை அமைக்க ரூ. 45 லட்சம் தேவைப்படும். இலுப்புலி ஊராட்சி மற்றும் மாவுரெட்டிப்பட்டி ஆகிய இரண்டு ஊராட்சிகளுக்கு சார்ந்ததாகும். 2.350 கி.மீ. தூரம் உள்ள இச்சாலையில் எந்த ஒரு குக்கிராமமும் இல்லை. மானாவாரி விவசாய பொருட்கள் மட்டுமே விளையும் விளைச்சல் பகுதியாகும். இச்சாலையினை நபார்டு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) (பொ), எலச்சிபாளையம் அவர்களின் ந.க.எண் 2676/2011/அ3, நாள்: 14-12-2011.]*	வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) எலச்சிபாளையம் அவர்கள் மனுதாரர் கோரியுள்ள சாலையினை நபார்டு திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் தார் சாலையாக மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	2984	திரு. எம். பொன்னுசாமி, த/பெ. முத்துசாமி, முத்தூர், எஸ். வாழவந்தி (அஞ்சல்), பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	கே. புதுப்பாளையம் கிராமம், வள்ளியப்பம்பட்டி முதல் நாமக்கல் ஒன்றியம் கே. ராசாம்பாளையம், புலவர்பாளையம் வரை புதிய தார்சாலை அமைக்க கோரல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள சாலை 1 கி.மீ. மண் சாலையாகும். வள்ளியப்பம்பட்டி முதல் மோகனூர் ஒன்றிய எல்லை வரை உள்ள இந்த சாலையினை வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ.), மோகனூர் அவர்களின் ந.க.எண் 3785/2011/அ3, நாள்: 23–12–2011.]*	மேற்குறிப்பிட்ட சாலையினை அடுத்த நிதியாண்டில் (2012–13) முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க, வட்டார வளர்ச்சி அலுவலர், மோகனூர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	2987	செயலாளர், தமிழ்நாடு பயனீட்டாளர் சங்கம், 40–பி–1, சேந்தமங்கலம் சாலை, நாமக்கல்–637 001.	நாமக்கல் நகரில் உள்ள கொசவம்பட்டி ஏரியில் தூர் வாரி சுத்தம் செய்து தருமாறு கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
நாமக்கல் நகராட்சி எல்லைக்குள் 36 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கொசவம்பட்டி ஏரி தூர்வாரி சுத்தம் செய்ய தோராயமாக ரூ. 4.35 கோடி செலவு ஆகும். நகராட்சியில் இந்நிதியை செலவு செய்ய இயலாது என்பதால் அரசுக்கு பிரேரணை அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[ஆணையாளர் (பொ), நாமக்கல் அவர்களின் ந.க.எண் 6830/2011/ஹச்1.]*	நாமக்கல் நகரில் உள்ள கொசவம்பட்டி ஏரியை சுற்றுலாத் தலமாக அல்லது பார்க்கிங் ஏரியா மாதிரி செய்து பயனுள்ள ஒரு ஏரியாக ஆக்குவதற்கு தகுந்த நடவடிக்கையை எடுக்கக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	2990	நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு மன்றம், 1/74, ஒடப்பள்ளி, காவேரி ஆர்.எஸ். அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.	திருச்செங்கோடு வட்டம், ஒடப்பள்ளி கிராமத்தில் பொன்னி சர்க்கரை ஆலை சரியான எரிபொருளை பயன்படுத்தாமல் பக்காஸ் கழிவு, கடலை பொட்டு, தவிடு போன்ற பொருள்களை பயன்படுத்துவதால் காற்று மாசு ஏற்படுவதை தடுப்பது சம்பந்தமாக.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பள்ளிபாளையத்தில் உள்ள தி/ள் பொன்னி சர்க்கரை ஆலை 1984–ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்த ஆலை, நிலக்கரி மற்றும் கரும்புச்சக்கை (பக்காஸ்) ஆகிய இரண்டை மட்டுமே எரிபொருளாக பயன்படுத்தி வருகிறது. இந்த ஆலையில் உள்ள இரு நீராவி கொதிகலன்களில் (40T & 25T) இருந்து வெளியாகும் புகையினை சுத்திகரிப்பு செய்ய 'தூசு சேகரிப்பான்' (ESP) பொருத்தப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு செய்தபின் புகை 45 மீட்டர் மற்றும் 35 மீட்டர் உயரமுள்ள புகை போக்கிகள் மூலம் வெளியேற்றப்படுகிறது. இதன் காற்று மாசுத்தடுப்பு உபகரணங்களின் செயல்பாடுகள், சுற்றுச்சூழல் காற்றுத்தர ஆய்வு செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. மேற்படி புகாரின் அடிப்படையில் இந்த ஆலையினை 13–12–2011 அன்று தல ஆய்வு செய்தபொழுது ஆலையின் காற்று மாசுத் தடுப்பு உபகரணங்கள் முறையாக இயங்குவது கண்டறியப்பட்டது. இந்த ஆலையிலிருந்து வெளிப்படும் காற்று மாசுவின் அளவை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் 08–04–2011 அன்று காற்றுத்தர ஆய்வு மேற்கொண்டதில் காற்றில் உள்ள மாசின் அளவு, வாரியம் நிர்ணயித்துள்ள அளவுகளுக்குள் உள்ளது இந்த ஆலை காற்று மாசுத்தடுப்பு சாதனங்கள் இயக்குவதனை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. *(மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நாமக்கல் அவர்களின் கடித எண் மாசுகூபொ/நாம/கோ. 18130/ம.எண் 2990, நாள்: 14–12–2011.)*	ஒடப்பள்ளி கிராமம், பொன்னி சர்க்கரை ஆலையில் கோஜெனேட் பிளான்ட் உள்ளதா என்பதை ஆய்வு செய்து காற்று மாசுபடுவதை தவிர்க்க தனிக்கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்கவும், அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிக்கவும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
11	2993	P. தங்கவேலு, S. பழையபாளையம், எருமப்பட்டி ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்.	நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி ஒன்றியம், S. பழையபாளையம் ஊராட்சிக்குட்பட்ட அரசு மேல்நிலைப்பள்ளியில் 629 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச்சுவர் கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
சுற்றுச்சுவர் அமைத்துத் தர கோரும் கோரிக்கை மனு வரைபடத்துடன் பழையபாளையம், அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் அளித்துள்ளார். நபார்டு திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீட்டில் சேர்க்கப்பட்டு சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. *(மாவட்ட கல்வி அலுவலர், நாமக்கல் அவர்களின் கடித எண் 181/2011–12, நாள்: 13–12–2011.)*	மனுதாரர் கோரியுள்ள பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைக்கும் பணி தொடர்பாக தொடர் நடவடிக்கை குறித்து அறிக்கை ஒன்றினை அனுப்புமாறு மாவட்ட கல்வி அலுவலர், நாமக்கல் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	2994	எஸ். செங்கோடன், த/பெ. சுந்தரம், ஆண்டிகாடு, கோழிக்கால்நத்தம் அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்–637 302.	1. மண் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றக் கோருதல். 2. மின் கம்பத்தை மாற்றி அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
1. மனுதாரர் கோரியுள்ளபடி, கோழிக்கால்நத்தம் பேருந்து நிறுத்தம் முதல் பேருந்து நடத்துனர் செல்வராஜ் வீடு வரை 60 மீ நீளம் 3 மீ அகலத்திற்கு சாலை அமைக்க ரூ. 1.00 இலட்சம் ஆகும். ஊராட்சிக்கு மாநில நிதிக்குழு மான்யம் தற்போது பெறப்பட்டுள்ளது. ஊராட்சி மன்றத் தீர்மானத்தை எதிர்நோக்கி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்ற அனுமதி பெறப்பட்டு 31–01–2012க்குள் பணி முடிக்கப்படும். ஒ. ராஜபாளையம் ஊராட்சி 2011–2012–ம் ஆண்டு 'தாய்' சர்வே திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு சர்வே முடிக்கப்பட்டுள்ளது. 2. சாலையின் நடுவே உள்ள மின்கம்பத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கக் கோரி திருச்செங்கோடு கிழக்கு மின்வாரிய பொறியாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), திருச்செங்கோடு, அவர்களின் ந.க.எண் 3686/2011/அ3, நாள்: 12–12–2011.]*	மண் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றவும் சாலையின் நடுவே உள்ள மின்கம்பத்தை மாற்றி அமைத்திடவும் திருச்செங்கோடு வட்டார வளர்ச்சி அலுவலருக்கு பரிந்துரைப்பதோடு அது குறித்த அறிக்கையினை குழுவிற்கு அனுப்புமாறும் குழு வலியுறுத்துகிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
13	2996	ரா. சிவக்குமார், தந்தை பெயர் ராஜாரத்தினம், 1வது தெரு, 16, பி, சட்டையம்புதூர் திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.	சட்டையம்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
பள்ளியை தரம் உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் இவ்வலுவலக ந.க. எண். 106/அ2/2011, நாள்: 15–12–2011ன் படி சென்னை தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. *[மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், நாமக்கல் கடித எண். 3250/அ4/2011, நாள்: 15–12–2011.]*	அடுத்த ஆண்டு கண்டிப்பாக சட்டையம்புதூர் நகராட்சி துவக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாகத் தரம் உயர்த்திட நாமக்கல் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
14	3001	திரு. வி. சின்னுசாமி, ஊர் பொது மக்கள் மற்றும் விவசாயிகள், பட்டத்தையன் குட்டை, பெரியகுளம் அஞ்சல், நாமக்கல் மாவட்டம்.	பெரியகுளம் ஊராட்சி பட்டத்தையன் குட்டை கிழக்கு ஏரனை பாலம் சீரமைத்தல் மற்றும் பட்டத்தையன் குட்டை கிழக்கே 2 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைத்தல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம் பெரியகுளம் ஊராட்சி பட்டத்தையன் குட்டை முதல் திருமலைகிரி சாலை வரை மண் சாலையாக உள்ளது. மேற்படி சாலை பழுதடைந்து போக்குவரத்து ஏதுவாக இல்லை. மேற்படி சாலையில் கி.மீ 0/8–ல் ஆறு வரிகள் கொண்ட (Six Rows) சிமெண்ட் குழாய் பாலம் ஒன்று உள்ளது. அதில் உள்ள சிமெண்ட் குழாய்கள் உடைந்துள்ளது. மழைக் காலத்தில் இதன் வழியாக தண்ணீர் செல்லாமல் சிறு	மனுதாரர் கோரியுள்ள பெரியகுளம் ஊராட்சி பட்டத்தையன்குட்டை கிழக்கே 2 கி.மீ. நீளத்திற்கு சாலை அமைக்கும் பணியை முன்னுரிமை அடிப்படையில் அடுத்த நிதியாண்டில் செய்து முடிப்பதற்கு திட்ட இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்வதோடு, அது குறித்த அறிக்கையினையும் அனுப்பிவைக்குமாறு பரிந்துரை செய்கிறது.

பாலத்தின் மேலேயும், அருகில் உள்ள வயல் வெளிகளிலும் தண்ணீர் செல்கிறது. இதனால் அந்த வழியாக போக்குவரத்திற்கு கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே மேற்படி சாலை மற்றும் பாலம் ஆகியவற்றை புதுப்பிக்க தொகை ரூ. 45 இலட்சம் மதிப்பீடு ஆகும். இதனை சிறப்பு திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் சிறப்பினமாக கருதி எடுத்து செய்யலாம்.

வ. எண்	ஊராட்சி பெயர்	பணியின் பெயர்	மதிப்பீடு (ரூ.இலட்சம்)
1	பெரியகுளம்	பட்டத்தையன் குட்டை முதல் திருமலைகிரி சாலை வரை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/2–1/5 (2 Layer WBM+BT)	25.00
2	பெரியகுளம்	பட்டத்தையன் குட்டை முதல் திருமலைகிரி சாலையில் 0/8–ல் சிறு பாலம் அமைத்தல் (6.00m span RCC Culvert)	20.00
		மொத்தம் (ரூ.)	45.00

[ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், தேந்தமங்கலம் அவர்களின் கடித எண் 2072–2011/02, நாள்: 14–12–2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	3002	எஸ். பாஸ்கரன், த/பெ செங்கோட கவுண்டர், PP 1–54, இராகவானந்தம் நகர், பேப்பர் மில் காலனி ரோடு, காவிரி R.S. அஞ்சல், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.	மல்லிக்கரை–இராசிபுரம்–திருச்செங்கோடு–ஈரோடு சாலை கி.மீ. 94/2–94/660–ல் பள்ளிப்பாளையம் அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்திற்கு அருகில் கூடுதலாக ஒரு பாலம் அமைப்பதற்கு பதிலாக புதன் சந்தைக்கு நேர் குமாரப்பாளையம் சாலையில் பாலம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மல்லிக்கரை–இராசிபுரம்–திருச்செங்கோடு–ஈரோடு சாலை கி.மீ. 94/2–94/660–ல் பள்ளிப்பாளையம் அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே தற்சமயம் உள்ள இருவழி பாலத்திற்கு அருகில் புதியதாக ஒரு பாலம் அமைக்க நபார்டு ஆர்.ஐ.டி.எப். திட்டம்: 159இல் ரூ. 1466.00 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள இருவழி பாலத்தில் அதிக அளவில் போக்குவரத்து நெரிசல் உள்ளதால் இப்புதிய பாலம் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இப்பாலம் அமையும் இடத்தினை சேலம் (நெடுஞ்சாலை) புலனாய்வு கோட்டத்தின்மூலம் ஆய்வு செய்து நேர்பாடு தயாரிக்கப்பட்டு கண்காணிப்புப் பொறியாளர் (நெ.) (ந.க.கிசா) சேலம், (நெ) (க.மே) சேலம் மற்றும் (தேநெ.) சேலம் ஆகிய மூன்று கண்காணிப்புப் பொறியாளர்களும் ஆய்வு செய்து அங்கீரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பாலத்திற்கான அணுகு சாலைகள் அகலப்படுத்தி போக்குவரத்து நெரிசல் ஏற்படாவண்ணம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தெரிவித்துள்ள வேறு வழிதடத்தில் பாலம் அமைக்க இதற்கு முன்னர் ஆய்வு எதுவும் செய்யப்படவில்லை. மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள வழிதடத்தில் பாலம் அமைப்பதற்கு அதிக அளவில் நில எடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே மனுதாரர் தெரிவித்துள்ளவாறு பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

(கோட்டப்பொறியாளர்(நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் சேலம், அவர்களின் கடித நக. எண் 1004/2011/இ1, நாள்: 14-12-2011.)

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில், பாலம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையாதலால், ஏற்கெனவே, அரசினால் அனுமதி வழங்கப்பட்ட இடத்தில் பாலம் கட்டும் பணியினை முடித்துவிட்டு அறிக்கை ஒன்றினை அனுப்புமாறு சேலம், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் (நெ) அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	3004	திரு. எஸ். பொன்னுசாமி, தந்தை பெயர் செங்கோட கவுண்டர், வடக்கு சாலை, புள்ளாக்கவுண்டம்பட்டி அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.	புள்ளாக்கவுண்டம்பட்டியில் இருந்து கிளாப்பாளையம் வரை உள்ள 1.80கி.மீ விவசாய விளை நிலங்களுக்கு செல்லும் ஊராட்சி மண்சாலையை தார் அல்லது சிமெண்ட் சாலையாக மாற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

1.80 கி.மீ. நீளம் கொண்ட மண் சாலையாகும். புள்ளாக்கவுண்டம்பட்டி மற்றும் கிளாப்பாளையம் ஊராட்சியை சார்ந்ததாகும். இச்சாலை அமைத்தால் பயனடையும் மக்கள் தொகை 630 ஆகும். 4 குக்கிராமங்கள் பயனடையும். இரண்டடுக்கு கப்பி மற்றும் தார், 2 சிறுபாலங்கள் மற்றும் தடுப்பு சுவர் அமைக்க ரூ. 35 லட்சம் தேவைப்படுகிறது. இச்சாலையினை சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) (பொ), ~~மல்லிபாளையம்~~ அவர்களின் கடித எண். 2676/2011/அ2 நாள் 14-12-2011.]

குழுவின் பரிந்துரை

(6)

திருச்செங்கோடு வட்டம், புள்ளாக்கவுண்டம்பட்டியிலிருந்து கிளாப்பளையம் வரை செல்லும் மண் சாலையை தார் சாலையாக மாற்ற அடுத்த நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் செய்து முடிக்க வட்டார வளர்ச்சி அலுவலர் எலச்சிபாளையம் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
17	3010	திரு. ரா. சிவக்குமார், தந்தை பெயர் ராஜாத்தினம், 1வது தெரு 16-B, சட்டையம்புதூர், திருச்செங்கோடு.	நாமக்கல் மாவட்டத்தில் ஷேர் ஆட்டோ (பயணிகள் டாக்ஸி) அனுமதி கேட்டு விண்ணப்பம்.

துறையின் பதிலுரை

(5)

அரசாணை எண். 377 உள்(போ.4) துறை நாள்: 22-03-2011-ன்படி ஷேர் ஆட்டோ அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மாவட்ட ஆட்சியரின் பெருந்திட்ட வளாகம் நாமக்கல் அவர்களின் கடித எண் மற்றும் நாள் இல்லை.)

குழுவின் பரிந்துரை

(6)

நாமக்கல் மாவட்டத்தில் முதலில் பத்து ஷேர் ஆட்டோக்களுக்கு அனுமதி வழங்க நாமக்கல் மாவட்ட ஆட்சியருக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
18	3021	திரு. என். நடேசன், செயலாளர், திருச்செங்கோடு வட்ட பயனீட்டாளர் சங்கம், கொல்லப்பட்டி, அணிமூர் அஞ்சல், திருச்செங்கோடு வட்டம்–637 214.	திருச்செங்கோடு நகரின் கழிவுநீர் செல்வதற்கு சரியான சாக்கடை வசதிகள் அமைக்கப்படாததால் சாக்கடை கழிவு நீர், சாயப்பட்டறை கழிவு நீர் விவசாயிகளின் கிணறுகளிலும், விவசாய விளை நிலங்களிலும் விடப்படுவதனால் நிலம், நீர் காற்று மாசடைந்து வருவதை தடுக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
மேற்படி மனு திருச்செங்கோடு நகர கழிவு நீர் செல்லும் வடிகால் மற்றும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளை தடுக்கக் கோரிய பொதுப்படையான மனுவாகும். திருச்செங்கோடு நகரப்குதியில் தி/ள் ஜான்சன் டெக்ஸ்டைல் புராசசர்ஸ் என்ற துணி சாயமிடும் தொழிற்சாலை ஒன்று மட்டுமே உள்ளது. வேறு சாய பட்டறைகள் ஏதும் இல்லை. தி/ள் ஜான்சன் டெக்ஸ்டைல் புராசர்ஸ் தற்போது கழிவுநீரை மறு சுழற்சி முறை மூலம் சுத்திகரிப்பு செய்து சுத்திகரிக்கப்பட்ட நீரை நிறுவனமே உபயோகப்படுத்தி வருவதனால், இதன் கழிவு நீர் வெளியேற்றப்படுவதில்லை. திருச்செங்கோடு நகரத்தின் வடிகால் கழிவு நீரை சுத்திகரிப்பு செய்ய பாதாள சாக்கடை மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைக்கும் திட்டம் திருச்செங்கோடு நகராட்சியால் செயல்படுத்தப்படும் பொழுது மேற்படி கழிவு நீரால் நிலம், நீர் மாசுபடுவது தடுக்கப்படும். *[மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், நாமக்கல் அவர்களின் கடித எண் மாசசூபொநாம/ கோ.18130/ம.எண். 3021/ நாள்: 14–12–2012.]*	நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் சாயப்பட்டறைகளில் சுத்திகரிக்கப்படாத சாய நீரை கால்வாயில் விடாமல் இருப்பதற்கும், அனுமதி பெறாமல் இயக்கும் சாயப்பட்டறைகளைக் கண்டறிந்து அங்கிருந்து வெளியேற்றப்படும் நீரை தடுத்து நிறுத்தவும், நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
19	3022	திரு.பொ. பன்னீர்செல்வம், தந்தை பெயர். பொன்னுசாமி, 4/10, மூலப்பாளையம், இலுப்புலி ஊராட்சி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.	எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம்–இலப்புலி மாவரெட்டிப் பட்டி ஊராட்சி எல்லையில் அமைந்துள்ள வெள்ளக்கரடு, குமாரசாமி கோயில் முதல் வடுகபாளையம் கண்ணூர் மாரியம்மன் கோயில் வரை 3.00 கி.மீ. மண்சாலையை தார் சாலையாக மாற்றுதல்.

துறையின் பதிலுரை

(5)

மாவரெட்டிப்பட்டி ஊராட்சியை சார்ந்ததாகும். இச்சாலையின் நீளம் 2.20 கி.மீ. கொண்டதாகும். 400மீ. நீளம் ஓரடுக்கு கப்பியும் 1800 மீட்டர் நீளம் மண்சாலையாகவும் உள்ளது. பொதுமக்கள் பெருமளவு வந்து செல்லும் கோயில் பகுதியாகும். இச்சாலையில் கி.மீ. 0/0–0/4 வரை ஓரடுக்கு கப்பி மற்றும் தார், கி.மீ.0/4–2/2 வரை இரண்டடுக்கு கப்பி மற்றும் தார், 4 சிறு பாலங்கள் அமைக்க ரூ. 39.60 லட்சம் தேவைப்படுகிறது. எனவே, மேற்படி சாலையை நபார்டு திட்டத்தின்கீழ் 2012–13–ஆம் ஆண்டு எடுத்து கொள்ள கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி/ (பொ), எலச்சிபாளையம் அவர்களின்

~~கடித ந.க.எண். 2676/2011/அ3 நாள். 14.12.2011.~~

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
20	3024	சின்ன. சுப்ரமணியம், Ex. ஊராட்சி உறுப்பினர், சின்னமுதலைப்பட்டி, நாமக்கல்–637 003.	ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சின்ன முதலைப்பட்டியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. தற்போது சின்ன முதலைப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக்கோரும் முன்மொழிவுகள் இவ்வலுவலக ந.க. எண். 3250/அ4/2011, நாள்: 15–12–2011–ன்படி நாமக்கல் மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண் 3250/அ4/2011, நாள்: 15–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையை தார்சாலையாக அமைக்க திருச்செங்கோடு வட்டம், எலச்சிபாளையம் ஊராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலர், 2012–13 ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின்கீழ் கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்ததைத் தொடர்ந்து முன்னுரிமை அடிப்படையில் அப்பணியைச் செய்து முடிக்க குழு பரிந்துரை செய்கிறது.

குழுவின் பரிந்துரை

(6)

சின்னமுதலைப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்திட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், நாமக்கல் அவர்கள் அடுத்த நிதியாண்டில் முன்னுரிமை அளித்து செய்திட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
21.	3030	திரு. ப. குப்புசாமி, தந்தை பெயர். பழனி, மேலப்பட்டி, எஸ். வாழவந்தி (அஞ்சல்), பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	கே. புதுப்பாளையம் கிராமம், கே. புதுப்பாளையம் முதல் புளியம்பட்டி கீழ் சாத்தம்பூர் சாலை வரை தார்சாலை பழுதடைந்துள்ளது. மேற்படி சாலையை புதிய தார்சாலையாக மாற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
2 கி.மீட்டருக்கு ஓரடுக்கு கப்பி சாலை மற்றும் தார்சாலையாக அமைக்கவும் மற்றும் 390 மீ ஈரடுக்கு தார்சாலையாக அமைக்கவும் ரூ. 31 லட்சம் செலவாகும். இந்த சாலையின் மூலம் 350 நபர்கள் பயனடைவார்கள் (அக்கரையாம்பாளையம் மற்றும் புளியம்பட்டி குக்கிராமங்கள்), நடப்பு நிதியாண்டில் மேற்கண்ட பணியினை செய்து முடிக்க போதுமான அளவு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, வரும் நிதியாண்டில் வெள்ள சீரமைப்புத் திட்டத்தின் மூலம் இப்பணியினை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மோகனூர் அவர்களின் கடித ந.க. எண் 3785/11/அ3, நாள்: 23-12-2011.]*	பரமத்தி வேலூர் வட்டம், கே. புதுப்பாளையம் முதல் புளியம்பட்டி கீழ் சாத்தம்பூர் சாலை வரை பழுதடைந்துள்ள சாலையை வரும் நிதியாண்டில் வெள்ள சீரமைப்பு திட்டத்தின்மூலம் முன்னுரிமை அடிப்படையில் செய்து முடித்து அது குறித்து அறிக்கையை குழுவிற்கு அனுப்புமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மோகனூர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	3031	திரு. கே. சந்திரமோகன், ஒன்றியக்குழு உறுப்பினர், பெரமாண்டபாளையம், எஸ். வாழவந்தி (அஞ்சல்) ப. வேலூர் (தாலுக்கா) நாமக்கல் மாவட்டம்.	நாமக்கல்லிலிருந்து வள்ளிபுரம், கே. புதுப்பாளையம், எஸ். வாழவந்தி பெரமாண்டப்பாளையம், ஆண்டிப்பாளையம், சர்க்கரை ஆலை வழியாக மோகனூர் செல்ல மாலை 5.00 மணிக்கு பேருந்து இயக்க வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
நாமக்கல்லிலிருந்து நகரப்பேருந்து தடம் எண் 9–ஏ காலையில் 06.20 மணிக்கும், மோகனூரில் 07.30 மணிக்கு இயக்கப்படும் இரண்டு நடைகளும், நாமக்கல்லில் இரவு 20.25 மணிக்கு இயக்கப்படும் ஒரு நடையும் மொத்தம் 3 நடைகள் எஸ். வாழவந்தி, பெரமாண்டபாளையம், ஆண்டிப்பாளையம் வழியாக தற்போது இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து பல்முனை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருவதாலும் மனுவில் கேட்கப்பட்ட நேரமான மாலை 17.15 மணிக்கு நாமக்கல்லிலிருந்து கொசவம்பட்டி, அண்ணா நகர், தூசூர் வழியாக பாலப்பட்டி, பீமநாயக்கனூர் வரை பள்ளி மாணவ மாணவிகள் பயன் பெறும் வகையில் இயக்கப்பட்டு வருவதாலும் மனுவில் கேட்டுள்ளவாறு மாற்றி இயக்க வழியில்லை. *[மேலாண் இயக்குநர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (சேலம்) வரையறுக்கப்பட்டது, சேலம் அவர்களின் கடித எண் 40321/திவ3/துமே(வ) தநாஅபோக/2011, நாள்: 13–12–2011.]*	நாமக்கல்லிலிருந்து வள்ளிபுரம், கே. புதுப்பாளையம், எஸ். வாழவந்தி பெரமாண்டப்பாளையம், ஆண்டிப்பட்டி, சர்க்கரை ஆலை வழியாக மோகனூர் செல்ல மாலை 5.00 மணிக்கு மேல் எந்தப் பேருந்தும் இல்லை என்பதால், ஏற்கெனவே இயக்கப்படும் பேருந்துகளை பெரமாண்டபாளையம் வரை நீட்டிக்கவோ அல்லது கட் சர்வீஸ் விடவோ ஏற்பாடு செய்யுமாறு, மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், நாமக்கல் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சத்யமேவ ஜயதே
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
23	3036	பி. முத்துசாமி, டி.எம்.இ. (பொதுமக்கள் சார்பாக) மாநில மனித உரிமை கமிஷன் உறுப்பினர் சேலூர் கந்தம்பாளையம், சேலூர் (அஞ்சல்), நாமக்கல் மாவட்டம்.	சேலூர் கிராமம், சாணார்பாளையம் பஸ் நிறுத்தத்திலிருந்து வடுகபாளையம்புதூர் செல்லும் சாலையை தார் சாலையாக மாற்றியமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

சேலூர் கிராமம், சாணார்பாளையம் பஸ் நிறுத்தத்திலிருந்து வடுகபாளையம்புதூர் சாலையின் நீளம் 1 கி.மீ. இதில் 400 மீ தார் சாலையாக உள்ளது. மீதி உள்ள 600 மீ மெட்டல் சாலையாக உள்ளது. இது தற்போது போக்குவரத்திற்கு ஏற்ற நிலையிலேயே உள்ளது. இந்த மெட்டல் சாலையை தார் சாலையாக மாற்றம் செய்ய ரூ. 9.00 இலட்சம் நிதி தேவை. அடுத்த ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் பெறப்பட்டு ஜனவரி மாத இறுதிக்குள் பணி துவக்கப்படும்.

குழுவின் பரிந்துரை

(6)

கபிலர் மலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், சேலூர் கிராமம் சாணார்பாளையம் பஸ் நிறுத்தத்திலிருந்து வடுகபாளையம் புதூர் செல்லும் சாலையை தார் சாலையாக்கும் பணி விரைவில் முடிக்கப்படும் என்று உறுதியளித்தால், பணியை முடித்ததற்கான அறிக்கையை அனுப்புமாறு குழு பரிந்துரை செய்கிறது.

[ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், கபிலர்மலை, அவர்களின் கடித ந.க. எண் 1182/2011/அ3/நாள்: 14–12–2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
24	3039	திரு. நா. மதியழகன், மாநில பொதுச் செயலாளர், தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கம், 44, திருவள்ளுவர் சாலை, பொத்தனூர், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்–638 181.	பரமத்தி வேலூர் வட்டம், குமாரபாளையம் வாய்க்காலில் குச்சிபாளையம் முதல் வேலூர் வரை வாய்க்கால் கரையில் தார்சாலை அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

பரமத்தி வேலூர் வட்டம் குமாரபாளையம் வாய்க்காலின் வலது கரையில் தார் சாலை அமைக்க கோரும் இடம் 3.20 கி. மீ. உள்ளது. இதனை சமப்படுத்தி தார் சாலை அமைக்க தோராயமாக ரூ. 47.00 லட்சம் மதிப்பீட்டு தொகை தேவைப்படுகின்றது. எனவே உரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் இந்த தார் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரியுள்ள இடத்திற்கு தார் சாலை அமைக்கும் பணியினை நபார்டு திட்டத்தின் கீழ் செய்வதற்கு செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை நீர் ஆதாரத் துறை, சரபங்கா வடிநிலக் கோட்டம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

[செயற்பொறியாளர் பொ.பது. நீ.ஆ.அ சரபங்கா வடிநில கோட்டம், நாமக்கல் அவர்களின் க.எண் 495 பல/வப/வ2/கோ. 108/2011 நாள்: 13–12–2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
25	3040	திரு. க. முருகேசன், 87, காமராஜ் நகர் கோனேரிப்பட்டி, இராசிபுரம்.	காமராஜர் நகரில் 6 வீதிகளுக்கு சாக்கடை வசதி செய்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மேற்படி காமராஜ் நகரில் மனுதாரர் கோரியுள்ள 6 வீதிகளுக்கு சாக்கடை கட்டவும் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கவும் ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ள அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் மனுதாரர் கோரிய பணி முடிக்கப்படும். *[ஆணையாளர் இராசிபுரம் நகராட்சி, நாமக்கல் மாவட்டம், அவர்களின் கடித எண். 7134/11/இ1/நாள்; 13–12–2011.]*	காமராஜ் நகரில் 6 வீதிகளுக்கு சாக்கடை வசதி செய்து தரும் பணி குறித்தான அறிக்கையை குழுவிற்கு அனுப்புமாறு இராசிபுரம் நகராட்சி, ஆணையாளர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
26	3041	திரு. ஆர். ஆனந்த், தந்தை பெயர் ராமசாமி, எஸ்.வாழவந்தி (அஞ்சல்) பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	மோகனூர் ஒன்றியம், பெரமாண்டம்பாளையம் கிராமம் முத்தூரில் உலர்களம் அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள உலர்களம் அமைக்க ரூ. 1.50 லட்சம் தேவைப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் உலர் களம் அமைக்க இனி வரும் ஒன்றியக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்படும். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மோகனூர் அவர்களின் கடித ந.க. எண் 3785/11/அ3, நாள்: 23–12–2011.]*	மோகனூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் ஒன்றிய பொது நிதியின் கீழ் மோகனூர் ஒன்றியம், பெரமாண்டம்பாளையம் கிராமம், முத்தூரில் உலர்களம் அமைக்கும் பணியினை முடித்துவிட்டு அது தொடர்பான அறிக்கையினை அனுப்புமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
27	3042	திரு. ஆர். யுவராஜ், தந்தை பெயர் ராமசாமி, எஸ். வாழவந்தி (அஞ்சல்) பரமத்தி வேலூர் வட்டம்.	மோகனூர் ஒன்றியம், கே. புதுப்பாளையம் கிராமம், வள்ளிபுரம், சாலையிலிருந்து அய்யம்பாளையம் நொச்சிப்பட்டி வரை தார்சாலையை புதிய தார் சாலையாக மாற்றித்தர கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 2 கி.மீ. நீளமுள்ள தார்சாலையை, புதிய தார்சாலையாக மாற்ற ரூ. 26 லட்சம் செலவாகும். இந்த சாலையின் மூலம் 650 நபர்கள் பயனடைவார்கள் (கே. அய்யம்பாளையம், நொச்சிப்பட்டி மற்றும் பெரமாண்டம்பாளையம் குக்கிராமங்கள்) நடப்பு நிதியாண்டில் மேற்கண்ட பணியினை செய்து முடிக்க போதுமான அளவு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, வரும் நிதியாண்டில் வெள்ளரிமைப்புத் திட்டத்தின் மூலம் இப்பணியினை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மோகனூர் அவர்களின் கடித ந.க. எண் 3785/11/அ3, நாள்: 23–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரியுள்ள சாலையினை தார் சாலையாக மாற்றிட வரும் நிதியாண்டில் வெள்ளச் சீரமைப்பு திட்டத்தின்கீழ் பணியினை நிறைவேற்றி அது குறித்த அறிக்கையை அனுப்புமாறு மோகனூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
28	3043	திருச்செங்கோடு வட்ட பயனீட்டாளர் சங்கம், கொல்லப்பட்டி, அணிமூர் அஞ்சல், திருச்செங்கோடு.	கொக்கராயன்பேட்டை செல்லும் தார்சாலையிலிருந்து கொல்லப்பட்டி பகுதியில் இருந்து மேற்புறமாக பெருமாள்கோயில் வழியாக பாலியகாடு, குளத்தோட்டம், கொட்டக்காடு, சாணார்பாளையம் வழியாக ஈரோடு செல்லும் சாலையை சீரமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுவில் குறிப்பிப்பட்டுள்ள சாலை மனுதாரருடன் நேரடியாக சென்று பார்வையிடப்பட்டது. இந்த மண் சாலை 2550 மீட்டர் நீளம் கொண்டது. இதில் நகரளவை ஆவணங்களின் படி வார்டு ஓ பிளாக் 32 நகரபுல எண்கள் 67,68,69,70 மற்றும் வார்டு ஓ பிளாக் 33 நகரபுல எண் 93 முதலியன ஆணையாளர் திருச்செங்கோடு நகராட்சி எனவும் வார்டு ஓ பிளாக் 33 நகரபுல எண்கள் 1,26,27, 29,31/1,2 ஆகியன வட்டாட்சியர் வண்டிப்பாதை எனவும் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை வட்டாட்சியர் வண்டிப்பாதை என வகைப்பாடு செய்யப்படுத்தியுள்ள பகுதியிலும் ஆணையாளர் திருச்செங்கோடு என வகைபாடு செய்யப்பட்டுள்ள பகுதியிலும் புதியதாக தார்சாலை அமைக்க ரூ. 49.00 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியின் நிதிநிலைக்கேற்ப வரும் நிதியாண்டுகளில் நகர்மன்ற ஒப்புதல் பெற்று இப்பணி மேற்கொள்ளப்படும்.

[ஆணையாளர் (கூ.பொ. திருச்செங்கோடு நகராட்சி அவர்களின் கடித எண் 13325/இ1/11, நாள்: 14–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையை சீரமைக்கும் பணியினை வரும் நிதியாண்டில் மேற்கொண்டு முடித்து அது குறித்த அறிக்கையை அனுப்புமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
29	3044	திரு. இளங்கோவன், தந்தை பெயர் வடிவேல் பிள்ளை, எஸ். வாழவந்தி (அஞ்சல்), பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	பெரமாண்டம்பாளையம் கிராமம் தொட்டிபட்டியில் நாயக்கர் சமூகத்து பெண்களுக்கு தனியாக சமூக கூடம் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

பெண்களுக்கு தனியாக சமூகக் கூடம் அமைக்க ரூ. 1,50,000/ – குறைந்தபட்சம் மதிப்பீடு ஆகும். எனவே, நடப்பு நிதியாண்டில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அவர்களிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மோகனூர் அவர்களின் கடித

ந.க.எண் 3785/2011/அ3 நாள். 23-12-2011.]

குழுவின் பரிந்துரை

(6)

பெரமாண்டம்பாளையம் கிராமம் தொட்டிபட்டியில் நாயக்கர் சமூகத்து பெண்களுக்கு தனியாக சமூக கூடம் அமைக்கும் பணி தொடர்பான நடவடிக்கை குறித்து அறிக்கை அனுப்புமாறு மோகனூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
30	3046	திரு. நடராஜன், தந்தை பெயர் ரங்கசாமி, எஸ். வாழவந்தி (அஞ்சல்), பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	மோகனூர் ஒன்றியம் எஸ். வாழவந்தி ஊர்ச் சந்தையில் (நபார்டு மூலம்) கொட்டகை அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள கொட்டகை அமைக்க (நபார்டு) திட்டத்தின் மூலம் அனைத்து மதிப்பீடுகளும் செய்யப்பட்டு முன் மொழிவு அனுப்பப்பட்டு உள்ளது. ஒப்புதல் வரப்பெற்றவுடன் மேற்கண்ட பணி செய்து முடிக்கப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மோகனூர் அவர்களின் கடித ந.க.எண் 3785/2011/அ3, நாள்: 23–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மோகனூர் ஒன்றியம், எஸ். வாழவந்தி ஊர்ச்சந்தையில் கொட்டகை அமைக்கும் பணியினை நபார்டு திட்டத்தின்கீழ் செய்து முடித்து அதற்கான அறிக்கையை அனுப்புமாறு மோகனூர், வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
31	3046A	திரு. மணிவண்ணன், தந்தை பெயர் கரும்மண்ண கவுண்டர், குட்லாம்பாறை, கே. புதுப்பாளையம் (அஞ்சல்), பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	கே. புதுப்பாளையம் கிராமம், குட்லாம்பாறை பஸ் நிறுத்தம் காளிபாளையம் செல்லும் சாலை பழுதடைந்துள்ளது. அதை புதிய தார்சாலையாக மாற்ற கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள 2 கி.மீ வரை பழுதடைந்துள்ள சாலையினை புதிய தார் சாலையாக மாற்ற ரூ. 17.00 லட்சம் தேவைப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் மேற்கண்ட பணியினை செய்து முடிக்க போதுமான அளவு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, வரும் நிதியாண்டில் வெள்ள சீரமைப்புத் திட்டத்தின் மூலம் இப்பணியினை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மோகனூர் அவர்களின் கடித ந.க.எண் 3785/2011/அ3, நாள்: 23–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையினை வரும் நிதியாண்டில் வெள்ள சீரமைப்புத் திட்டத்தின் கீழ் செய்திடவும் அது குறித்த அறிக்கையினை அனுப்புமாறும் வட்டார வளர்ச்சி அலுவலர், மோகனூர் அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
32	3115	திரு. எம்.என்.பி. வடிவேல், கூத்தம்பூண்டி ஊராட்சி கழக செயலாளர், டாக்டர் புரட்சித் தலைவி பேரவை, ஒன்றிய இணைச் செயலாளர், மேட்டுப்புதூர், புள்ளாக்கவுண்டம்பட்டி அஞ்சல், எலச்சிபாளையம் ஒன்றியம், திருச்செங்கோடு,	நாமக்கல் மாவட்டம். திருச்செங்கோடு வட்டம் எலச்சிபாளையம் ஒன்றியம், கூத்தம்பூண்டி கிராமம், நாமக்கல் மெயின்ரோட்டிலிருந்து அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒட்டி மாணிக்கம்பாளையம் செல்லும் கப்பி சாலையை தார் சாலையாக மாற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மேற்படி சாலை 1.20 கி.மீ. நீளம் கொண்ட கப்பி சாலையாகும். 1.20மீ இரண்டடுக்கு கப்பி மற்றும் தார், 1 சிறுபாலம் அமைக்க ரூ. 37.50 லட்சம் தேவைப்படுகிறது. கூத்தம்பூண்டி ஊராட்சியை சார்ந்ததாகும். எனவே, இச்சாலை வரும் நிதியாண்டில் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் எடுத்து செய்யப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) (பொ) எலச்சிபாளையம் அவர்களின் கடித ந.க.எண் 2676/2011/அ3 நாள்: 14–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

எலச்சிபாளையம் வட்டாரவளர்ச்சி அலுவலர் அவர்கள் மனுதாரர் கோரியுள்ள சாலையினை வரும் நிதியாண்டில் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் செய்து முடித்து அது தொடர்பான அறிக்கையினை அனுப்புமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
33	3116	திரு. வீ. பொன்னுசாமி, தந்தை பெயர் சீரங்கன் மற்றும் ஊர் பொதுமக்கள், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம், வால்குழிப்பட்டி–புதூர் பாலப்பட்டி, துவரம்பள்ளம் அஞ்சல், கொல்லிமலை.	புதூர் பாலப்பட்டி முதல் வால்குழிப்பட்டி வரை வனத்துறை மூலம் சாலை அமைக்க வனத்துறையின் அனுமதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மேற்படி சாலை அமைக்க முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெரப்பஞ்சோலை ஊர் பொதுமக்கள்ஆகியோர் நாமகிரிப்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மனு செய்து, நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மூலம் பழங்குடியினர் மற்றும் இதர மலைவாழ் மரபினர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006ன் படி அனுமதி கேட்டு பிரேரணைகள் வரப்பெற்றன. மேற்படி சட்டத்தின்கீழ் அனுமதி வழங்க வேண்டுமாயின் சாலை தேவைப்படும் பரப்பு 1 ஹெக்டேருக்குள்ளும் வெட்ட வேண்டிய மரங்கள் 75க்குள்ளும் இருக்க வேண்டும். மேலும் உயர்நீதி மன்றம் W.P. No. 4533/ 08 நாள்: 14–03–2008 மற்றும் 30–04–2008–ல் பிறப்பித்த உத்தரவின்படி சமூக உரிமைகள் கோரி வரும் இனங்களில் மரங்கள் வெட்டப்பட வேண்டுமாயின் உயர்நீதி மன்றத்திடமிருந்து ஆணை பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், கோட்டாட்சியர் மூலமாக வரப்பெற்ற பிரேரணையில் மேற்படி விபரங்கள் இல்லாததால் அவ்விவரங்களுடன் பிரேரணையினை மீள அனுப்பி வைக்க கோட்டாட்சியருக்கு இவ்வலுவலக கடித எண். 9147/2009/வ, நாள்: 08–12–2011–ல் கடிதம் எழுதப்பட்டுள்ளது. கோட்டாட்சியரிடம் விபரம் பெற்று மேல் நடவடிக்கை தொடரப்படும். *[மாவட்ட வன அலுவலர் நாமக்கல் வனக்கோட்டம் அவர்களின் கடித எண் 4949/06/வ, நாள்: 13–12–2011.]*	மாவட்ட வன அலுவலர் அளவிலேயே அனுமதி பெற்று மேற்கண்ட பணியினை செய்து முடித்து அதற்கான இறுதி அறிக்கையினை குழுவிற்கு அனுப்புமாறு குழு பரிந்துரை செய்கிறது.

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
1	2976	திருமதி எஸ். சித்ரா, கணவர் பெயர் செந்தில்குமார், வாழவந்தி, பரமத்தி–வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	எஸ். வாழவந்தி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றித் தர கோரல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. தற்போது எஸ். வாழவந்தி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரும் முன்மொழிவுகள் இவ்வலுவலக ந.க. எண். 3250/அ4/2011, நாள்: 15–12–2011ன் படி நாமக்கல் மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது. *(நாமக்கல் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரின் ந.க. எண் 3250/அ4/2011, நாள்: 15–12–2011.)*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	2980	திரு. குருசாமி தந்தை பெயர் செங்கோட்டையன், வண்டிநத்தம், மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்.	வேலணம்பாளையம் அருந்ததியர் தெரு முதல் கொட்டு முடாக்காடு, சிங்காரத்தோட்டம், பள்ளர்பாளையம் பள்ளிப்பங்காடு, உலகப்பன்பாடு, பூலக்காடு, காக்காவிரியன்காடு பகுதிகளில் உள்ள மண் சாலையை தார்சாலையாக மாற்றக் கோருதல்

துறையின் பதிலுரை

(5)

மனுதாரர் வேலணம்பாளையம் அருந்ததியர் தெரு முதல் காக்காவிரியன் காடு வரை உள்ள மண்சாலையை தார்சாலையாக மாற்றக் கோரியுள்ளார்.

1. வேலணம்பாளையம் அரு தெரு முதல் வண்டிநத்தம் மோட்டார் ரூம் வரை 1 கி.மீ.
2. வண்டிநத்தம் மோட்டார் ரூம் முதல் பள்ளர்பாளையம் வரை 600மீ மண் ரோடு.
3. பள்ளர்பாளையம் முதல் பள்ளிபங்காடு வரை 500 மீ மண் ரோடு.
4. பள்ளப்பங்காடு முதல் உலகப்பண்காடு வரை 300 மீ AGMT தார் சாலை.
5. உலகப்பண்காடு முதல் காக்காவிரியன் காடு–1 கி.மீ. மண்சாலை இதில் வேலணம்பாளையம் அரு தெருவில் வசிக்கும் 14 குடும்பங்களை சேர்ந்த 75 நபர்கள் சென்று வர வசதியாக அவினாசிப்பட்டி பருத்திப்பள்ளி தார்சாலை உள்ளது. இவர்களுக்கு மனுதாரர் கோரும் சாலை வசதி முக்கியமானதல்ல.

மொத்தம் மனுதாரர் கோரும் சாலை அமைந்தால் பள்ளர்பாளையம் கிராமத்தில் உள்ள 20 குடும்பங்கள் (சுமார் 100 பேர் மட்டும்) பயனடைவார்கள்.

மேற்படி 3.100 கி.மீ சாலை அமைக்க ரூ. 45. இலட்சம் செலவாகும். வரும் நிதியாண்டில் Nabard திட்டத்தின்கீழ் இந்த சாலை பணியை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) மல்லசமுத்திரம் அவர்களின் கடித ந.க. எண் 2670/2011/அ3, நாள்: 13–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

அடுத்த நிதியாண்டில் நபார்டு திட்டத்தின்கீழ் இப்பணியை மேற்கொள்ள வட்டார வளர்ச்சி அலுவலர், போளூர் அவர்கள் உறுதியளித்ததன் பேரில், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	2985	திரு. பி. என். மணி, ஊர் பொதுமக்கள், பெரமாண்டம்பாளையம், எஸ். வாழவந்தி (அஞ்சல்) பரமத்தி வேலூர் வட்டம்.	பெரமாண்டம்பாளையம் கிராமம் நொச்சிப்பட்டி முதல் சர்க்கரை ஆலை செல்லும் தார் சாலையில் இணையும் மண் சாலையை தார் சாலையாக மாற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள 1.40கி.மீ மண்சாலையை தார்ச் சாலையாக அமைக்க ரூ. 22.40 லட்சம் தேவைப்படுகிறது. இந்த சாலையானது விவசாய விளைப்பொருட்களை கொண்டு செல்ல மட்டுமே பயன்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் மேற்கண்ட பணியினை செய்து முடிக்க போதுமான அளவு நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மோகனூர், அவர்களின் ந.க.எண். 3785/11/அ3, நாள். 23-12-2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	2988	திரு. பெ. பெருமாள் தபெ. பெரியாக்கவுண்டர், மற்றும் ஊர் பொதுமக்கள், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், வகுரம்பட்டி, கதவு எண். 1/53, வசந்தபுரம் அஞ்சல், நாமக்கல் வட்டம் & மாவட்டம்.	வகுரம்பட்டி பஞ்சாயத்தில் துணை கால்நடை மருத்துவமனை கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

வகுரம்பட்டி மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 5000க்கு மேல் இருப்பதாலும், கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை கிளை நிலையம் 5 கீ.மீ. க்கு மேல் இருப்பதாலும் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. புதிய கால்நடை மருந்தகம் அமைக்க கோரும் பிரேரணை இயக்குநர் கால்நடை பராமரிப்புத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாமக்கல். அவர்களின் கடித எண் 1468/இ/2011 நாள் 08-08-2011.]

குழுவின் குறிப்புரை

(6)

நிரந்தரமாக கால்நடை மருந்தகம் அமைக்கும் வரை தற்காலிகமாக வகுரம்பட்டி கிராமத்தில் நடமாடும் கால்நடை மருந்தக சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய மண்டல இணை இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாமக்கல் அவர்கள் உறுதியளித்துள்ளதால் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
5	2989	திரு. மு. சேரன், முன்னாள் கவுன்சிலர், கொங்காளம்மன் கோவில் தெரு, அரியாகவுண்டம்பட்டி அஞ்சல்.	11வது வார்டு கந்தப்பகவுண்டர் காலனியில் கான்கிரீட் சாலை அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
நாமகிரிபேட்டை பேரூராட்சி, வார்டு எண். 11, கந்தப்பகவுண்டர் காலனி பகுதியிலுள்ள 1.50 கி.மீ. நீளமுள்ள சாலைகளை தார் சாலையாக அமைக்க ரூ. 27.00 ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பேரூராட்சியில் ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சி பணிகள் குறித்த அறிக்கையில் (Vision Statement) மேற்படி பணியை 2012–13ம் ஆண்டு செயல்படுத்த, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசின் பல்வேறு திட்ட நிதிகள் கிடைக்கப் பெற்றவுடன், மேற்படி சாலைப் பணியை 2012–13ம் ஆண்டில் செயல்படுத்த முன்னுரிமை அளிக்கப்படும். *[உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) (பொ), சேலம் மண்டலம், சேலம் அவர்களின் கடித எண் 2327/2011/ந, நாள்: 13–11–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
6	2991	திரு. பி. முத்துசாமி D.M.E. (பொதுமக்கள் சார்பாக) மாநில மனித உரிமை கழிவுன் உறுப்பினர், சேளூர் கந்தம்பாளையம், சேளூர் (அஞ்சல்) பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.	வேலூர் முதல் ஜோடர்பாளையம் நெடுஞ்சாலையிலிருந்து சேளூர் கந்தம்பாளையம் அரசமரம் பிரிவிலிருந்து செல்லப்பம்பாளையம் வழியாக கபிலர்மலை வரை செல்லும் சேதமடைந்துள்ள சாலையை சரி செய்யக்கோருவது தொடர்பாக.

துறையின் பதில்

(5)

வேலூர் முதல் ஜோடர்பாளையம் நெடுஞ்சாலையிலிருந்து சேளூர் கந்தம்பாளையம் அரசமரம் பிரிவிலிருந்து செல்லப்பம்பாளையம் வழியாக கபிலர்மலை வரை செல்லும் சாலையானது நபார்டு திட்டத்தின் மூலம் கபிலர்மலையிலிருந்து சாணார்பாளையம் வரையிலும் 5.575 கி.மீ. நீளம் கொண்டதாகவும் 62.13 லட்சம் மதிப்பிலும் சாலையை மேம்படுத்துவதற்காக அரசாணை எண். 105 நாள் 09–12–2011 அன்று ஆணைப் பிறப்பித்துள்ளது. இந்தப் பணி இம்மாத இறுதிக்குள் துவக்கப்படும்.

[ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், கபிலர்மலை அவர்களின் ந.க.எண். 1182/2011/அ3 நாள் 14–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

மனுதாரர் கோரியுள்ள பணிக்கு ரூ. 62.13 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், பணி மேற்கொள்ளப்படும் தருவாயில் உள்ளது என கபிலர் மலை ஊராட்சி ஆணையாளர் உறுதியளித்ததைத் தொடர்ந்து துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	2992	திரு. பி. வெங்கடாசலம், த/பெ. பழனி, வார்டு எண். 3, 3/6, அக்கலாம்பட்டி கிராமம், நாமகிரிபேட்டை அஞ்சல், நாமக்கல் மாவட்டம்.	அக்கலாம்பட்டி கிராமத்திற்கு செல்ல தார்ரோடு வசதியும், சாக்கடை வசதியும் செய்து தரக் கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி வளர்ச்சி மான்யத் திட்டம் 2011–12 மூலம் நாமகிரிபேட்டை பேரூராட்சி, அக்கலாம்பட்டி பகுதிக்கு செல்லும் சாலையை, தார்சாலையாக அமைக்கும் 01 வேலைக்கு ரூ. 17.30 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, 30–11–2011ம் தேதியில் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்ட நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன், மேற்காணும் பணி செய்து முடிக்கப்படும். *[உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) (பொ)., சேலம் மண்டலம், சேலம் அவர்களின் மற்றும் நாள் துறை அலுவலக கடித எண். 2211/2011/ஏ, நாள் 30–11–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	3000	திரு. கு. அசோக்குமார், 5/469, அன்பு நகர்–1, சேலம் ரோடு, நாமக்கல்–637 001.	நாமக்கல் சேலம் சாலையிலிருந்து கிழக்கு நோக்கி அன்பு நகர்–1க்கு செல்லும் பாதையினை சீர் செய்து தார் சாலையாக அமைத்துத் தர கோரல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்படி, நகராட்சிக்கு ஒப்படை செய்யாத பாதையாகும். எனவே, மேற்படி பாதையை நகராட்சியால் சீரமைக்க இயலாது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. *[ஆணையாளர் (பொ)., நகராட்சி நாமக்கல் அவர்களின் கடித எண் 6826/ 2011/இ1, நாள்: இல்லை.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	3003	திரு. S.P. ராமசாமி, த/பெ. பழனிக் கவுண்டர், தோப்புக்காடு, (பெண்கள் கல்லூரி தென்புறம்), காந்தி நகர், நாமக்கல்.	நாமக்கல் வட்டம், மோகனூர் கிராமம், நவலடியான் கோவில் கிழக்கு புறமாக செல்லும் மோகனூர் வாய்க்காலின் குறுக்கே தென்வடலாக பாலம் அமைத்துதர கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

நாமக்கல் வட்டம் மோகனூர் கிராமம், நவலடியான் கோவில் கிழக்கு புறமாக செல்லும் மோகனூர் வாய்க்காலின் குறுக்கே 8 மீட்டர் நீளம், 4 மீட்டர் அகலம் மற்றும் பக்க சுவர் கொண்ட பாலம் அமைக்க தோராயமாக 8 இலட்சம் நிதி தேவைப்படுகின்றது. எதிர்வரும் நிதியாண்டில் (2012–13) துறை உயர் அலுவலர்களிடம் உரிய அனுமதி பெற்று பராமரிப்பு தலைப்பின் கீழ் பணி மேற்கொள்ளப்படும்.

[செயற்பொறியாளர் பொ.ப.து., நீ.ஆ.அ. சரபங்கா வடிநில கோட்டம், நாமக்கல் அவர்களின் கடித எண். 501 எம் / வப / வ2 / கோ 108 / 2011. நாள்: 15–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

நாமக்கல் செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, நீர் ஆதாரத்துறை அவர்கள் 2012–13 ஆம் ஆண்டில் உரிய அனுமதியின்பேரில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பாலம் அமைக்கப்படும் என்று உறுதியளித்ததன் பேரில் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	3011	திரு. ரா. சிவக்குமார், த/பெ. இராஜரத்தினம், 1வது தெரு, 16–பி, சட்டையம்புதூர், திருச்செங்கோடு.	சட்டையம்புதூர் வாரச் சந்தையை சுற்றி கம்பிவேலி அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் பார்வையிடப்பட்டது. திருச்செங்கோடு சட்டையம்புதூர் வாரச்சந்தையை சுற்றி கம்பிவேலி அமைக்க நகர்மன்றக் கூட்டத்தில் பொருள் வைத்து நகர்மன்ற ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அருகில் உள்ள மதுக்கடையில் மது அருந்திவிட்டு ரகளையில் ஈடுபடுபவர்கள் மீது காவல் துறை மூலம் நடவடிக்கை எடுக்க காவல் ஆய்வாளர்கள் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

[ஆணையாளர் (கூ./பொ), திருச்செங்கோடு நகராட்சி அவர்களின் கடித எண். 13325/இ1/11, நாள்: 14–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

சட்டையம்புதூர் வாரச் சந்தையை சுற்றி கம்பிவேலி அமைக்கும் பணி தொடர் நடவடிக்கையில் உள்ளது என திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் உறுதி அளித்ததன் அடிப்படையில் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
11	3019	திரு. எஸ். வீரப்பன், D.A.E., வட்டார வளர்ச்சி அலுவலர் (ஒய்வு), 62/93, சாவடித் தெரு, இராமாபுரம்புதூர், நாமக்கல்–637 001.	நாமக்கல் நகரின் மையத்தில் உள்ள நகர சர்வே எண். 3இல் உள்ள கொசவம்பட்டி ஏரியில் புதிய பஸ் நிலையம் அமைக்க தேர்வு செய்யக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
நீர் நிலையான கொசவம்பட்டி ஏரியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்ய இயலாது. *[ஆணையாளர் (பொ), நகராட்சி நாமக்கல் அவர்களின் கடித எண். 6828/2011/இ1, நாள்: இல்லை.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
12	3023	திரு. தா.மு.ச. சுந்தரவடிவேல், தலைவர், நுகர்வோர் நல கவுன்சில், அத்தனூர் (அஞ்சல்), இராசிபுரம் (தாலுக்கா), நாமக்கல் மாவட்டம்.–636 301.	அத்தனூர் பேரூராட்சி பொதுமக்களின் தேவைக்காக பொது மயானம் அமைத்து கொடுக்கும் படி கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

நாமக்கல் மாவட்டம் அத்தனூர் பேரூராட்சியில் ஏற்கெனவே 9 மயானங்கள் உள்ளது. இருப்பினும் மனுதாரர் தெரிவித்துள்ள சர்வே எண். 1(3)ல் உள்ள 0.94.0 ஹெக்டேர் அரசு குன்று புறம்போக்கு நிலத்தினை இப்பேரூராட்சிக்கு மயான பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்துதரக் கோரி பேரூராட்சி மன்றத் தீர்மானம் எண். 260(7) நாள்: 30–11–2010ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 16/2011 நாள் 14–12–2011ல் மாவட்ட வருவாய் அலுவலர், நாமக்கல் அவர்களுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது கடிதம் ந.க.எண். 37790/2011/எல்2, நாள்: 22–12–11ல் மேற்படி குன்று புறம்போக்கு 0.94.0 ஹெக்டேர் நிலத்தில் 0.05.0 ஹெக்டேர் நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது என்றும், இதைத் தவிர மீதமுள்ள இடம் கரடாகவும், பாறையாகவும் இருப்பதால், மேற்படி இடம் பொது மயானத்திற்கு நிலமாறுதல் செய்ய தகுதியான இடமாக இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் அருகாமையில் உள்ள ஆலாம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள மயானத்தை பயன்படுத்தி வருகின்றார்கள். மேற்படி மயானத்தை பயன்படுத்துவதற்கு அக்கிராம மக்கள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை. மேலும் இப்பேரூராட்சி பகுதியில் அத்தனூர் புதூர் என்ற இடத்தில் சுமார் 500 மீட்டர் தூரத்தில் பொதுமயானம் அமைந்துள்ளது. இந்த மயானத்தையும் இப்பகுதி மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். புதியதாக இப்பகுதி மக்களுக்கு மயானம் அமைக்க போதிய இட வசதி ஏதும் இப்பகுதியில் இல்லை.

[உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்)(பொ), சேலம் மண்டலம், அவர்களின் கடித எண். 16/2011, நாள்: இல்லை.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
13	3027	திரு. பி. பழனிமுத்து மற்றும் ஊர் பொது மக்கள் அலங்காநத்தம் கிராமம், எருமப்பட்டி வட்டாரம், நாமக்கல் மாவட்டம்.	பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள சாலையை செப்பனிடுதல் மற்றும் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அலங்காநத்தம் முதல் சௌடேஸ்வரி அம்மன் கோயில் செல்லும் சாலையில் 0/0–0/400 முடிய ஓடுக்கு ஜல்லி தார் சாலை அமைத்தல், 0/401–0/800 முடிய தார் சாலை புதுப்பித்தல் மற்றும் 0/801–1/2 முடிய ஓடுக்கு ஜல்லி தார் சாலை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 12.750 லட்சங்கள் தேவைப்படுகிறது. தொலைக்காட்சி அறை முதல் மயானம் வரை 500 மீட்டர் சாலையை தார் சாலையாக புதுப்பித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 4.10 லட்சங்கள் தேவைப்படுகிறது. மண்டு முதல் சுடுகாடு வரை தெரு விளக்கு அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 85000/– நிதி தேவைப்படுகிறது. தற்போது போதிய நிதிவசதியின்மையால் அரசிடமிருந்து நிதி கிடைக்கப்பெறப்பட்டவுடன் ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து மேற்காணும் பணிகளை எடுத்து செய்யப்படும். *[ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், எருமப்பட்டி அவர்களின் ந.க. எண். 3101/2011/ அ2, நாள்: 15–12–2011.]*	அலங்காநத்தம், எருமப்பட்டி ஊராட்சி பயன்பாட்டில் உள்ள சாலையை செப்பனிடுதல் மற்றும் தெரு விளக்கு அமைக்கும் பணியினை எருமப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஒன்றியப் பொது நிதியிலிருந்து செய்து முடித்துவிடுகிறோம் என்று உறுதி அளித்ததன் அடிப்படையில் துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
14	3029	திரு. கே. செந்தில்குமார், த/பெ. குப்புசாமி, எஸ். வாழவந்தி (அஞ்சல்) பரமத்தி வேலூர் (தாலுக்கா).	வள்ளிபுரம் முதல் பாலப்பட்டி வரை உள்ள மாவட்ட இதர சாலையினை (ODR) மாவட்ட முக்கிய சாலையாக (MDR) மாற்றுவது தொடர்பாக.

துறையின் பதிலுரை

(5)

மனுவில் குறிப்பிடப்பட்ட சாலையானது நாமக்கல் (நெ) கோட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட இதர சாலையான வள்ளிபுரம் – பாலப்பட்டி சாலையாகும். இதன் மொத்த நீளம் கி.மீ. 0/0–15/4=15.40 கி.மீ. ஆகும் மேற்படி சாலையை மாவட்ட முக்கிய சாலையாக தரம் உயர்த்த இவ்வலுவலக கடிதம் Upgradation / 2011/இவ.அ.1/நாள் 07–12–2011 அன்று கண்காணிப்புப் பொறியாளர் (நெ) க(ம)ப சேலம் அவர்களுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

[கோட்டப் பொறியாளர்(க(ம)ப). நெடுஞ்சாலை, நாமக்கல் அவர்களின் க.எண். ச.ம.கு/2011/இவ.அ.2/நாள்: 15–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	3032	பாப்பாத்தி, த/பெ. கணேசன், பெரமாண்டம்பாளையம், எஸ். வாழவந்தி (அஞ்சல்) பரமத்தி வேலூர் வட்டம்.	பெரமாண்டம்பாளையம் அங்கன்வாடி எதிரில் உள்ள கிணற்றுக்கு தடுப்புச் சுவர் அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு ரூ. 1.70 லட்சம் தேவைப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் தடுப்புச் சுவர் அமைக்க இனி வரும் ஒன்றியக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ) மோகனூர் அவர்களின் ந.க.எண். 3785/11/அ3, நாள்: 23–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

வரும் நிதியாண்டில் மனுதாரர் கோரியுள்ள பணியைச் செய்து முடிக்க வட்டார வளர்ச்சி அலுவலர், மோகனூர் உறுதி அளித்ததன் அடிப்படையில், துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	3035	திரு. P. சரவணன், நாராயணன் நகர், B கொமரபாளையம்–638 183, நாமக்கல், மாவட்டம்.	நாமக்கல் மாவட்டம் கொமாரபாளையம் அரசு மருத்துவமனையில் கண் மற்றும் தோல் சிகிச்சை பிரிவு அமைக்க வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தோல் மருத்துவர் பணியிடம் மட்டும் (Rationalisation) படி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பணியிடம் நிரப்பாமல் வெற்றிடமாக உள்ளது. கண் மருத்துவர் பணியிடம் தோற்றுவிக்க கொள்கை அளவில் முடிவு செய்யப்படவேண்டி உள்ளது. ஆகவே இது மாவட்ட அளவில் செயல்படுத்த இயலாது. *[இணை இயக்குநர், நலப்பணிகள் அலுவலகம் நாமக்கல் அவர்களின் ந.க. எண். 4782/திவ/2011, நாள்: 12–12–2011.]*	துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
1	2971	திரு. எம். குப்புசாமி, த/பெ. முத்துசாமி, பெரமாண்டபாளையம் எஸ். வாழவந்தி (போஸ்ட்) ப. வேலூர் (தாலுக்கா)	நாமக்கல்லிலிருந்து வள்ளிபுரம், பாலப்பட்டி வழியாக 12–பி என்ற அரசுப்பேருந்து வேலூர் சென்று வருகிறது. 12பி பேருந்தினை பெரமாண்டபாளையம். நொச்சிப்பட்டி, அய்யம்பாளையம் வழியாக காலை 06.25, மாலை 3.30 மணிக்கு மட்டும் சென்று வருகிறது. இப்பேருந்தினை காலை 05.05 மணி மற்றும் மாலை 4.30 மணி ஆகிய நேரங்களில் வாழவந்தி வழியாக நேராக வேலூர் மற்றும் நாமக்கல் செல்வதை பெரமாண்டபாளையம். நொச்சிப்பட்டி, அய்யம்பாளையம் வழியாக இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
நாமக்கல்லிலிருந்து அதிகாலை 04.30 மணிக்கு எடுக்கும் நடையையும் மற்றும் வேலூரிலிருந்து 16.15 மணிக்கு எடுக்கும் நடையையும் குட்டலாம்பாறை, அய்யம்பாளையம், நொச்சிப்பட்டி, பெரமாண்டபாளையம் வழித்தடத்தில் 19–12–2011 முதல் கூடுதலாக இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. *[மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) அவர்களின் கடித எண். 40321/திவ3/துமே(வ)/ தநாஅபோக/2011, நாள்: 13–12–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	2978	திரு. V. ராஜகோபால், த/பெ. வேலுச்சாமி, 18/174–பி புதுத் தெரு, கணேசபுரம், நாமக்கல் மாவட்டம்.	நாமக்கல் – கரூர் தேசிய நெடுஞ்சாலை வள்ளிபுரத்தில் அசோக் லைலேண்ட் கம்பெனி முன்பு இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் ரோட்டின் இரு புறத்திலும் நிறுத்துவதால் போக்குவரத்திற்கு நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் விபத்துக்குள்ளாகி உயிரிழப்புகள் ஏற்படுவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டி கோருதல்.

துரைமின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வள்ளிபுரம் அசோக் லைலேண்ட் கம்பெனி முன்பாக அவ்வப்போது மேற்படி கம்பெனிக்கு சர்வீஸ் செய்ய வரும் லாரிகளை நிறுத்துவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்பட்டு விபத்து ஏற்படுவதாக சட்டமன்றப் குழுவினரிடம் பொதுமக்கள் சார்பால் முறையீடு செய்யப்பட்டதால், இது குறித்து மேற்படி லாரிகளை போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தாமல் இருக்க காவல்துறை போக்குவரத்து உதவி ஆய்வாளருக்கும், நெடுஞ்சாலை ரோந்து ஆய்வாளர் அவர்களுக்கும் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கம்பெனி நிர்வாகத்திற்கும் பாதுகாப்பு அதிகாரிக்கும் லாரிகளை கம்பெனி முன்பு நிறுத்தாமல் இருக்க தக்க அளிவுரை வழங்கப்பட்டுள்ளது. *[காவல் கண்காணிப்பாளர், நாமக்கல் மாவட்டம். அவர்களின் ந.க. எண். H1/755/039983/2011, நாள்: –12–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	2981	திரு. குருசாமி, த/பெ. செங்கோட்டையன், வண்டிநத்தம், மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்.	கைப்பம்பிற்கு பிளாட்பாரம் மற்றும் தெருவிளக்கு அமைத்துதர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுதாரர் கோரியபடி வண்டிநத்தம் ஊராட்சி வேப்பங்காட்டுபுதூரில் (பூலக்காடு முதல் காக்காவிரியன் காடு வரை செல்லும் சாலையில் உள்ளது) இந்த சாலையில் மனுதாரர் வீட்டில் இருந்து 100 மீட்டர் தொலைவில் கைப்பம்பு பிளாட்பாரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கைப்பம்பு இடத்தில் தெருவிளக்கு சான்று அமைக்க 3 கம்பங்கள் புதியதாக அமைக்க வேண்டும். இதற்கான தொகை (3 X 9500 = ரூ. 28500) மற்றும் இதர செலவினங்கள் ஆக மொத்தம் ரூ. 35,000/– ஆகும். தற்போது வண்டிநத்தம் ஊராட்சி மன்றத் தலைவர் மேற்படி தெரு விளக்கு அமைக்க ஊராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார். *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), மல்லசமுத்திரம். அவர்களின் ந.க. எண். 2670/2011/அ3, நாள்: 13–12–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	2995	திரு. ரா. சிவக்குமார், தபெ. ராஜரத்தினம், 1வது தெரு, 16–பி, சட்டையம்புதூர், திருச்செங்கோடு.	திருச்செங்கோடு கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நிலம் வேண்டல் மற்றும் சட்டையம்புதூர் கிராமத்தில் நூலகம் அமைக்க வேண்டல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருச்செங்கோடு கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் பொருட்டு காலிமனையினை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் பெயருக்கு மாற்றம் செய்யும் பொருட்டு கோப்பானது மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் நடவடிக்கையில் உள்ளது. மேற்படி காலிமனையானது மாவட்ட நூலக ஆணைக் குழு பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதும் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சட்டையம்புதூர் கிராமத்தில் நூலகம் அமைப்பது தொடர்பாக கீழ்க்காணும் ஐந்து நிபந்தனைகளை பூர்த்தி செய்தளிக்கும் பட்சத்தில் ஒரு பகுதி நேர நூலகம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 1. நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் வரை தற்காலிகமாக நூலகம் செயல்பட வாடகையின்றி சுமார் 600 சதுர அடி கொண்ட நல்ல நிலையிலுள்ள கட்டடம் ஒன்று. 2. பிற்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் பொருட்டு 5 சென்ட் முதல் 10 சென்ட் காலிமனை ஒன்று மாவட்ட நூலக அலுவலர் என்ற பதவி பெயருக்கு பத்திரப் பதிவு செய்து வழங்கப்பட வேண்டும். 3. தலா ரூ. 1000/– வீதம் இரண்டு நபர்கள் புரவலர்களாக சேர்க்கப்பட வேண்டும். 4. தலா ரூ. 20/– செலுத்தி (உறுப்பினர் காப்புத் தொகை ரூ. 15, சந்தா ரூ. 5/–) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும். 5. நூலக உபயோகத்திற்குத் தேவைப்படும் ரூ. 2000/– மதிப்புள்ள தளவாடப் பொருள்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும். *[மாவட்ட நூலக அலுவலர், (பொ), நாமக்கல் அவர்களின் கடித எண். 2351/இ/2004–1, நாள்: 13–12–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	2997	திரு. ரா. சிவக்குமார், த/பெ. இராஜார்த்தினம், 1வது தெரு 16–பி, சட்டையம்புதூர், திருச்செங்கோடு.	சட்டையம்புதூர் 1வது தெரு வாரச்சந்தை கேட் அருகில் மின்கம்பத்தில் தெரு விளக்கு அமைக்க கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள இடம் பார்வையிடப்பட்டது. திருச்செங்கோடு சட்டையம்புதூர் 1வது தெரு வாரச்சந்தை கேட் அருகில் மின்கம்பத்தில் தெரு விளக்கு அமைக்க இம்மாத இறுதியில் நடத்தவிருக்கின்ற நகர்மன்றக் கூட்டத்தில் பொருள் வைத்து நகர்மன்ற ஒப்புதல் பெற்று நடைமுறைகளை பின்பற்றி பணி மேற்கொள்ளப்படும். [ஆணையாளர் (கூ./பொ), திருச்செங்கோடு நகராட்சி அவர்களின் கடித எண் 13324/இ2/11, நாள் 14–12–2011]	மனுதாரரின் கோரிக்கை 10 நாட்களில் முடித்துத் தரப்படும் என்று திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் உறுதியளித்ததன் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	2998	திரு. எஸ். வீரப்பன், D.A.E., வட்டார வளர்ச்சி அலுவலர் (ஒய்வு), 62/93, சாவடித் தெரு, இராமாபுரம்புதூர், நாமக்கல்–637 001.	நாமக்கல் நகராட்சி நகர சர்வே எண். 10/1, 12/1, 25/1, 26/1, 23/3, மற்றும் 19/3 வழியாக செல்லும் நகராட்சி வண்டிப்பாதை ஜல்லி ரோடு அமைத்து தார்ரோடு ஏற்படுத்திக் கொடுக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இராமாபுரம் புதூர் சாலையிலிருந்து 250 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை உள்ளது. பொதுமக்கள் குடியிருப்பு வரை கப்பித்தளம் 300 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. தார் சாலை ஒருமாத காலத்திற்குள் முடிக்கப்படும். மீதமுள்ள பாதை விவசாய தோட்டத்திற்கு மட்டும் செல்லும் வழியாக உள்ளது. வேறு குடியிருப்புகள் ஏதுமில்லை. சாலை அமைக்க வேண்டிய தூரம் 0.65 கிலோ மீட்டர் ஆகும். இந்த சாலையினை செப்பனிட ஆகும் மதிப்பீடு தொகை ரூ. 25.00 லட்சம். நகராட்சியில் நிதி போதுமானதாக இல்லாததால், எதிர்வரும் காலத்தில் அரசு நிதி ஒதுக்கீட்டின் மூலமாக சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். *[ஆணையாளர் (பொ), நகராட்சி அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடித எண். 6829/2011/இ1, நாள்: இல்லை.]*	மனுதாரர் கோரியுள்ள பணி ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்படும் என நாமக்கல் நகராட்சித் தலைவர் உறுதியளித்ததன் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	2999	திருமதி. வி. செல்லம்மாள், க/பெ. எஸ். வீரப்பன் 62/93, சாவடி தெரு, இராமாபுரம் புதூர், நாமக்கல்–637 001.	நாமக்கல் வட்டம், நாமக்கல் கிராமம், நாமக்கல் நகராட்சி நகர சர்வே எண். 19/3, வண்டிப்பாதை மற்றும் வெள்ளவாரியின் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்–குறித்து.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
நாமக்கல் நகரம் சர்வே எண் 19/3 வண்டிப்பாதை மற்றும் வெள்ளவாரியில் ஆக்கிரமிப்புகள் செய்துள்ளதை நகர நில அளவை செய்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது. *[வட்டாட்சியர் நாமக்கல் அவர்களின் ந.க. எண். 6826/2011(ஜி1), நாள்: 14–12–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
8	3006	திரு. எஸ். முத்துசாமி (எ) மணி, பால்காரர், முத்துகாளிப்பட்டி அஞ்சல்–637 407	எடப்பாடி – இராசிபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ்வரும் குடிநீரின் பிரதான குழாயிலிருந்து நேரடியாக குடிநீர் விநியோகம் செய்வதை தடுத்து நிறுத்தக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
எடப்பாடி – இராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் முத்துகாளிப்பட்டி ஊராட்சிக்கு செல்லும் பிரதான குழாயிலிருந்து வாரிய அனுமதியின்றி ஊராட்சி மன்ற தலைவரால் தன்னிச்சையாக போடப்பட்ட பொதுக்குழாய்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டது. தற்பொழுது மேல்நிலைத் தொட்டிக்கு குடிநீர் சீராக ஏற்றப்பட்டு வருகிறது. *[நிர்வாகப் பொறியாளர் (கூ.பொ), த.கு.வ.வாரியம், பரமரிப்புக்கோட்டம், சேலம் அவர்களின் ந.க.எண். 2923/2011/ அ3/ நாள்: 13–12–2011.]*	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
9	3015	திரு. எஸ்.டி. பத்மநாபன், தலைவர், அண்ணா நகர் கிராம நலச்சங்கம், ரெட்டிப்பட்டி, எருமப்பட்டி வட்டாரம், நாமக்கல் மாவட்டம்.	அண்ணா நகர் மயானம் சீர்திருத்தம் செய்வது தொடர்பாக.

துறையின் பதிலுரை

(5)

அண்ணாநகர் பல்டா குட்டையில் உள்ள மயானத்திற்கு முன் பகுதியில் 40 மீ நீளம் சுற்றுச்சுவர் மற்றும் மயானத்திற்கு பின்பகுதியில்60 மீ நீளத்தில் தடுப்பு சுவர் அமைத்தல் பணி மதிப்பீட்டிற்குரூ. 6.00 லட்சங்கள் தேவைப்படுகிறது.

தற்போது போதிய நிதி வசதியின்மையால் அரசிடமிருந்து நிதி கிடைக்கப்பெறப்பட்டவுடன் ஊராட்சி பொதுநிதியிலிருந்து மேற்காணும் பணிகள் எடுத்து செய்யப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், எருமப்பட்டி. அவர்களின் ந.க.எண்.3101/2011/அ2 நாள்: 15–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

மாவட்ட ஆட்சியர், நாமக்கல் அவர்கள் அண்ணாநகர், பல்டாகுட்டையில் உள்ள மயானத்தினை சீரமைக்கும் பணி தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தொடர் நடவடிக்கையில் உள்ளது எனவும் படிப்படியாக பணியை நிறைவேற்றிட உறுதியளித்ததன் அடிப்படையிலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	3033	திரு. பி. பொன்னுசாமி, எம் 4/51 பொன்விழா நகர், திருச்சி ரோடு, வகுரம்பட்டி.	வகுரம்பட்டி கிராமம் – பொன்விழா நகர் மேற்கு பகுதி – கழிவு நீர் வடிகால் சரியாக அமைக்கப்படாதது – சரிசெய்து தர வேண்டுதல் – தொடர்பாக.

துரையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுவில் குறிப்பிட்ட இடத்தில் 30 மீட்டர் வடிகால் வசதியினை (சாக்கடை வசதி) ஏற்படுத்தி வகுரம்பட்டி ஊராட்சி மன்ற கூட்டத்தில் தீர்மானம் இயற்றி ஊராட்சி பொது நிதியில் மேற்கொள்ள ஊராட்சி மன்றத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார். மேற்படி பணியின் மதிப்பீடு ரூ. 50000/– ஆகும். 31–01–2011க்குள் மேற்படி பணி முடித்து பொதுமக்கள் உபயோகத்திற்கு விடப்படும்.	நாமக்கல் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், வகுரம்பட்டி கிராமம் – பொன்விழா நகர் மேற்கு பகுதி கழிவுநீர் வடிகால் சரிசெய்யும் பணி 30–01–2012–க்குள் முடித்து விடுவதாக உறுதியளிக்கப்பட்டதால், நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

[ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், நாமக்கல். நாமக்கல் மாவட்டம். அவர்களின் ந.எண். 3512/2011/அ3 நாள்: 15–12–2011.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
11	3034	திரு. மு. கனகராஜ், தபெ. முத்துசாமி, 1/201, அல்லா கோவில் தெரு, நா.புதுப்பட்டி, நாமக்கல் (மாவட்டம்)	என்.புதுப்பட்டி ஊராட்சி சர்வே எண் 426 வண்டிப்பாதைப் புறம்போக்கு ஆக்கிரமிப்புகள் வருவாய்த் துறையின் மூலம் இடிக்கப்பட்ட கழிவுகளை அப்புறப்படுத்தி தரக்கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி ஆக்கிரமிப்புகள் வருவாய்த்துறையின் மூலம் இடிக்கப்பட்டு, இடிக்கப்பட்ட கழிவுகள் முழுவதும் அப்புறப்படுத்தப்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) மோகனூர் அவர்களின் ந.க.எண். 3785/11/அ3/ நாள்: 23–12–2011.]

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.